**லலித் அதுலத் முதலி மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2019**

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லலித் அதுலத் முதலி மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. .இந்த அறிக்கையில் அரசியலமைப்பின் பிரிவு 154(6) இன்படி, பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து,நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தினை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியத்தின் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

நிதியத்தின வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு

பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

### 1.5.2 கணக்கீட்டு நியமத்தில் இருந்து விலகல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)நிதிகூற்றின் குறிப்பு 17 இல் குறிப்பிடப்பட்ட நிதி சொத்தின் தேய்வடைய கூடியதாக காட்டிய மொத்த தொகுதிகடன் ரூபா 3,601,600,000 மற்றும் இலங்கை நிதியறிக்கையிடல் 09 (எஸ்எல்எவ்ஆர்எஸ 09) இன் பிரகாரம், நிதி சொத்துக்கள் தேய்வடைய கூடிய பெறுமதியில் குறிப்பிடப்படவில்லை. | பொது துறை கணக்கீட்டு நியமத்தின் படி,தேய்வடையும் பெறுமானம் கட்டாயமில்லை. | நம்பிக்கை நிதியத்தின் கணகீட்டு கொள்கைகள் குறிப்பிட்டதன் படி, நிதியத்தின் கணக்குகள் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி தயாரிக்க வேண்டும். |
| (ஆ)இலங்கை கணகீட்டு நியமத்தின் இலக்கம் 08 பந்தி 49 இன் படி,முன்னைய மாற்றங்களின் தன்மை மற்றும் அளவு வெளிப்படுத்த வேண்டிய போதிலும், நிதிகூற்றில் முன்னைய ஆண்டில் ஏற்பட்ட மொத்த ரூபா 42,955,902 வெளிப்படுத்தப்படவில்லை. | முன்னைய ஆண்டில் ஏற்பட்ட மாற்றங்களின் தன்மை மற்றும் அளவு குறித்த அறிக்கை எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி,முன்னைய ஆண்டின் மாற்றங்கள் தொடர்பாக நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ)இலங்கை கணகீட்டு நியமத்தின் 24 இன் படி,தொடர்புடைய தரப்பினர் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் தொடர்புடைய தரப்பினர்களான வரையறுக்கப்பட்ட (உத்தரவாதத்தால்) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம், வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி,வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி மற்றும் இலங்கை லொத்தர் சபையின் கொடுக்கல் வாங்கலை வெளிப்படுத்தவில்லை. | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தொடர்புடையதாக அடையாளம் காணப்பட்ட அனைத்து நிறுவனங்களும் மஹாபொல நம்பிக்கைப் நிதியத்தின் துணைக்கம்பனி மற்றும் துணை நிறுவனங்களாகும்.ஆகையால், அந்த கொடுக்கல் வாங்கல் ஈடுபட்ட தரப்பினரிற்கான கொடுக்கல் வாங்கலாக வகைப்படுத்த முடியாது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி,இணைந்த தரப்பினரின கொடுக்கல் வாங்கல் நிதி கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாலபேயில் அமைந்துள்ள 2005 இல் ரூபா 12,460,179 ஆக கணக்கிடப்பட்ட 25 ஏக்கர் நிலப்பரப்பு மதிப்பாண்டில் தற்போதைய பெறுமதிக்கு மதிப்பிடப்படவில்லை மற்றும் புத்தகங்களில் பதியப்படவில்லை. | பிரதான அரச மதிப்பாளரின் அறிக்கையை பெற்ற பின்பு தற்போதைய பெறுமதி புத்தகங்களில் எடுத்துக் கொள்ளப்படும். | சொத்தின் சரியான பெறுமதி நிதிகூற்றில் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) மஹாபொல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ரூபா 408,500,000 தொகையினை மாலபேயில் உள்ள எஸ்எல்ஐஜரி கட்டிடத்தை நிர்மானிக்க செலவிடப்பட்டது.மற்றும் எஸ்எல்ஐஜரிற்கு அந்த தொகை 2015 இல் மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு திருப்பி செலுத்தப்பட்டது.எனினும்,நிதியம் கட்டிடத்தின் உரிமையை உறுதிப்படுத்தாமலும் மற்றும் தற்போதைய பெறுமதியை சரியாக மதிப்பிடாமலும் ரூபா 1,064,520,695 என கட்டிடத்திற்கு பெறுமதியிட்டது. | பிரதான அரச மதிப்பாளரின் அறிக்கையை பெற்ற பின்பு தற்போதைய பெறுமதி கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்படும். | கட்டிடத்தின் உரிமை செலுத்தப்பட்டதன் பின்பு மற்றும் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றதன் பின்பு சரியான பெறுமதி கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |
| (இ) நிதிகூற்றுக்களின் படி,அரச வங்கியின் சேமிப்புக் கணக்கு 31 டிசம்பர் 2019 இல் ரூபா 2,381,392 ஆக காணப்பட்ட போதிலும்,உறுதிப்படுத்தப்பட்ட மீதி ரூபா2,407,963 ஆக காணப்பட்டது. | 28 டிசம்பர் 2019 இல் வங்கி குறிப்பிட்ட மீதியாகும். | வித்தியாசத்திற்கான காரணம் கண்டறியப்பட வேண்டும் மற்றும் தேவையான திருத்தங்களை மேற் கொள்ள வேண்டும். |
| (ஈ)நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்கிலாபமாக 2019 ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து பெறப்பட்ட இலாபம் ரூபா 1,160,977,603 ஆக காணப்பட்ட போதிலும்,01 ஜீன் 2020 திகிதியிடப்பட்ட பிஎஸ்/பிஎவ்/5/36/விஔஎல்-ix/2020 இலக்கமிடப்பட்ட ஜனாதிபதி நிதிய கடிதத்தில் ரூபா 997,346,600 என நம்பிக்கை நிதியத்தின் வருமான கூற்றில் குறிப்பிடப்பட்டது.இதன்படி, வருமான கூற்றில் ரூபா 163,631,003 வருட வருமானம் உண்மையான வருமானத்தை விட குறைவாக காட்டியது. | நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பாக அபிவிருத்தி லொத்தர் சபையால் பெறப்படும் இலாபத்தை ஜனாதிபதி நிதியம் 28.02.2020 வரை உறுதிப்படுத்தாத காரணத்தால் வருமானம் சரியாக கணக்கிடப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் முன்பு மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் இலாபத்தினை உறுதிப்டுத்த மற்றும் கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) 31 டிசம்பர் 2019 இல் அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து பெற | 28.02.2020 அன்று அபிவிருத்தி லொத்தர் சபையில் | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் முன்பு |

| | | |
|---|---|---|
| வேண்டிய வருமான பங்கிலாபம் ரூபா 185,289,003 என ஜனாதிபதி நிதியம் குறிப்பிட்ட போதிலும்,நிதிகூற்றில் ரூபா 75,000,000 என குறிப்பிடப்பட்டது.எனவே,ரூபா 110,289,003 இலாபம் பெற வேண்டிய இலாபத்திலும் குறைவாக குறிப்பிடப்பட்டது. | இலாபத்தில் இருந்து 31.12.2019 இல் நம்பிக்கை நிதியத்திற்குரிய பங்கிலாபத்தை ஜனாதிபதி நிதியம் உறுதிப்படுத்தாத காரணத்தால் மிகுதி பெற வேண்டியவை சரியாக கணக்கிட முடியவில்லை. | ஜனாதிபதி நிதியத்தில் இருந்து மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பப்படாத இலாபத்தினை கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ)ஆதனம்,பொறி மற்றும் உபகரணத்தின் பெறப்பட்ட பெறுமதி ரூபா 16,426,582 காணப்பட்ட போதிலும்,அதன் உண்மையான பெறுமதி ரூபா 16,248,500 ஆகும். | இது முன்னைய ஆண்டு திருத்தங்களின் போது ஏற்பட்ட கணக்கீட்டு வழு ஆகும். காசுப்பாய்ச்சல் கூற்றில் இருந்து பதிவழிக்கப்பட வேண்டும்.எதிர்வரும் காலங்களில் கணக்கீட்டு வழுக்களை போதியளவு குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது சரியான பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.5.4 ஒருங்கிணைப்பு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பாண்டில் நம்பிக்கை நிதியத்திற்கு சொந்தமான இரண்டு துணை நிறுவனங்களான வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி இன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும்,அவ்வாறு தயாரிக்கப்படவில்லை. | 12 ஜீன் 2019 இல் நடைபெற்ற கோப் குழுவின் அனுமதியுடன்,2019 ஆம் ஆண்டில் இருந்து ஒருங்கிணைந்த கணக்குகள் தயாாரிப்பதற்காக நம்பிக்கை பொறுப்பு சபையின் அனுமதியுடன் கணக்காய்வு நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உடனடியாக தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுறவு மற்றும் மொத்த வியாபார கட்டிடத்தை வாடகைக்கு பெற மேற்கொண்ட ரூபா 348,810 வைப்பானது அந்த கட்டிடத்தில் இருந்து மாறி 3 ஆண்டு கடந்த பின்பும் திரும்ப பெறவில்லை. | 29.11.2017 மற்றும் 04.04.2018 இல் எழுத்துமூல வேண்டுகோள் ச.தோ.ச விற்கு மேற்கொள்ளப்பட்ட போதிலும்,வாடகை வைப்பினை அந்த நிறுவனம் திருப்பி செலுத்தவில்லை. | பணத்தினை திரும்பி பெற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2013 முதல் பல பாடசாலைகளில் நிர்மாணங்கள் சார்பாக பாடசாலை அபிவிருத்தி நிதியத்தில் இருந்து ரூபா 3,832,875 செலுத்தப்பட வேண்டிய தொகையானது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டது.எனினும், இது தொடர்பாக யாரும் உரிமை கோரததால் திறைசேரி அனுமதியின் கீழ் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ச.தோ.ச இன் கீழ் நிறுவப்பட்ட சி.டபில்யு.இ நிர்மான மற்றும் வழரயறுக்கப்பட்ட இன்ஜினியரிங் (தனியார்) கம்பனி மூடப்பட்டிருப்பதாலும் நம்பிக்கை நிதியத்திற்கும் இந்த நிறுவனத்திற்கும் இடையில் ஒப்பந்தம் இல்லாததாலும் நம்பிக்கை நிதியத்தால் இந்த நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்ய முடியாதுள்ளது.அதன்படி,நம்பிக்கை பொறுப்பு சபையின் எதிர்காலத்தில் கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்படும். | பொருத்தமான அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் கணக்குகளில் உடனடியாக பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| நிதி ஒழுங்கு விதி 103(1) (அ) மற்றும் 104 (3) (4) | நிதியத்திற்கு சொந்தமான கார் 20.05.2019 இல் விபத்துக்குள்ளாகிய போதிலும்,இந்த நிதி ஒழுங்கு விதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | லொக் பதிவுகள் வாகன விபத்து தொடர்பாக பதியப்பட்டது.மூன்றாம் தரப்பு நபர்/சொத்து பாதிப்பு ஏற்படவில்லை.காப்புறுதி நிறுவனத்தால் மொத்த நட்டமும் மீள செலுத்தப்படுவதால் பொலிஸில் அறிவிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் நிதி ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படும் | நிதி ஒழுங்கு விதிகளுடன் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 755,972,796 தொகையான மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 451,560,612 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 304,412,184 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. முன்னேற்றத்திற்கான பிரதான காரணம் முதலீட்டில் இருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 978,316,002 அதிகரித்தமை ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நம்பிக்கை நிதியசட்டத்தின் பிரிவு 6.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களையும் பொருள்களையும் பூர்த்தி செய்ய நிதியம் கருத்தில் கொள்ளவில்லை, அதாவது பள்ளிகள், நிறுவனங்கள், அடித்தளங்கள் மற்றும் கல்வி, அமைத்தல் மற்றும் முகாமைத்துவம் போன்றவற்றில் ஈடுபடுவது போன்ற நிறுவனங்கள் அல்லது நிர்வகித்தல் அல்லது தொழிற்பயிற்சி தகுதி மற்றும் திறன்களை இயக்கும் தொழிற்பயிற்சி நிறுவனங்களை அமைத்தல் மற்றும் நிர்வகித்தல், மதிப்பாண்டில் விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் தகுதி மற்றும் திறன்களை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதற்கும் உதவி வழங்குதல். | எதிர்காலத்தில் நிதியத்தின் நிலை நிலையானதாக இருக்கும் போது இந்த நோக்கம் அடையப்படும். | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட இந்த இலக்குகளை அடைய கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ)நம்பிக்கை பொறுப்பு நிதியசட்டத்தின் பிரிவு 6.2 (அ),(இ)மற்றும் (ஈ) இன் பிரகாரம் ,நம்பிக்கை பொறுப்பு நிதியமானது அரசின் அனுமதியுடன் பணத்தை உருவாக்குவதற்காக லொத்தர்கள் நடத்துவதற்கு, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலகங்களில் இருந்து அல்லது மூலப்பொருளில் இருந்து கொடை ,பரிசு அல்லது நன்கொடை பெறுவதற்கு அதிகாரம் உள்ள போதிலும், அத்தகைய மூலங்களில் இருந்து நிதியம் உழைக்கவில்லை. | செயற்பாட்டில் உள்ளது. | தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |
| (இ)பல்கலைக்கழக அனுமதியினை பொறாத மாணவர்களுக்காக தகவல் தொழில்நுட்ப துறையில் உயர்கல்வி நுழைவாயிலை ஆரம்பிப்பதற்கான இலக்குடன் நம்பிக்கை நிதியத்தின் பங்களிபபில் இருந்து தகவல் தொழில்நுட்ப நிறுவனம் கட்டுவதற்கு 08 ஜீலை 1998 திகதியிடப்பட்ட அமைச்சரவை | எதிர்காலத்தில் எஸ்எல்ஐஐரி நிறுவனம் தொடர்பாக அமைச்சரவை பத்திரத்தில் அமைச்சரவை நடவடிக்கை எடுப்பதாக | தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |

பத்திர இல 98/995/11/052 ஊடாக அறிவிக்கப்பட்டது.

அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி,உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளரால் 28 ஜனவரி 1999 இல் தலைமை தாங்கப்பட்ட கூட்டத்தில் இடைக்கால ஏற்பாடக வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) தகவல் தொழில்நுட்ப நிறுவனமாக ஸ்தாபிக்கப்படுகிறது மற்றும் இடைக்காலம் முடிவடைந்த பின்னர் மெறாட்டுவ பல்கலைக்கழகத்தின் கீழ் இந்த நிறுவனம் எடுத்துக்கொள்ளப்படுவதாக தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, ''இலங்கை'' இணை உள்ளடக்கி வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனமானது 1982 ம் ஆண்டு 17 ம் இலக்க கம்பனிச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது மற்றும் தேவையான நிதி வழங்குவதன் மூலம் வளப்பங்களிப்பு வழங்குவதற்கான பொறுப்பு மஹாபொல நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் கவனித்த விடயங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) இலங்கை வரையறுக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனத்துடன் 19 மார்ச் 2003 இல் மேற்கொண்ட உடன்படிக்கைப்படி (எஸ்எல்ஐஐரி) பல்கலைகழகம் மஹாபொல நிதியத்துக்கு சொந்தமான மாலபேயில் உள்ள 25 ஏக்கர் நிலப்பரப்பில் ஸ்தாபிக்கப்பட்டு 8 வருடகாலத்துக்கு முகாமைத்துவத்திற்காக அந்த கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டது. 14 நவம்பர் 2005 இல் உடன்படிக்கை முடிவடையும் காலப்பகுதிக்கு முதல் நம்பிக்கை பொறுப்பு நிதியமானது மீண்டும் வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் உடன்படிக்கையை ஏற்படுத்தியது. மற்றும் ஆரம்ப உடன்படிக்கையில் நீக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் நிதியத்திற்கு பயனுள்ளதாக இருந்தது.

நீக்கப்பட்ட நிபந்தனைகள்

-------------------------------------------

- பிரிவு 4 (உ) - மஹாபொல பல்கலைக்கழகத்திற்குரிய எல்லா சொத்துக்கள் மற்றும் வருமானங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதாவது வர்த்தக நோக்கங்களிற்காகவோ பயன்படுத்த கூடாது. அது நம்பிக்கை நிதியத்தின்

குறிக்கோளிற்கு அல்லது எஸ்எல்ஐஐரி இன் வேறுகிளைகளிற்கு பொருத்தப்படற்றது.

- பிரிவு 4 (ஊ) - நம்பிக்கை நிதியத்தின் ஒப்புதலுடன் பல்கலைகழகத்தின் முன்னேற்றத்துக்காக செய்யப்படும் அனைத்து நடவடிக்கைகளும் செய்யப்பட வேண்டும்.

- பிரிவு 4 (எ) - கல்வி கற்கைகளை நடத்துவதில் இருந்து சம்பாதிக்கும் வருமானத்தை சேகரித்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் நன்மைக்காக தேவையான செலவுகளை செலவழிப்பது என்பவை எஸ்எல்ஐஐரி இன் பொறுப்பாகும்.

- பிரிவு 4 (ஜே)- நம்பிக்கை நிதியத்தால் பல்கலைக்கழகத்தை அமைக்கும் நோக்கத்திற்காக தேசிய அபிவிருத்தி வங்கியிடம் (என்டிபி) இருந்து கணிசமான அளவு கடன் பெறப்பட்டதை எஸ்எல்ஐஐரி தெரிந்திருக்க வேண்டும் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் எஸ்எல்ஐஐரி இன் நிதிநிலைமை நிலையாக இருக்கும் பொழுது தவணைக்கட்டணம் செலுத்துவதற்கு முயற்சியளிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

- பிரிவு 4 (கே)- அறிமுகப்படுத்தும் புதிய கற்கை நெறிகளை மதிப்பிடு செய்வதற்கு மிகவும் திறமையான மற்றும் தகுதியான ஊழியர்களை கொண்ட திறமையான குழுவினை நியமிப்பதற்கு நம்பிக்கை பொறுப்பு குழுவிற்கு அதிகாரம் உண்டு மற்றும் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் கணக்குகளை பரீட்சிப்பதற்கு மற்றும் மதிப்பிடு செய்வதற்காக திறைமையான முகாமையாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களை கொண்ட சுயாதீனமான குழுவினை நியமிக்கும் அதிகாரம் உண்டு.

- பிரிவு 4(ஐ)- நம்பிக்கை பொறுப்பு குழுவின் தீர்மானத்தின் படி, மாலபே பல்கலைக்கழகமானது மஹாபொல பல்கலைக்கழகம் என்ற பெயருடனும்,புதிய மண்டபம் லலித் அதுலத்முதலி மண்டபம் எனவும் பெயரிடப்பட வேண்டும். மற்றும் அந்த பெயர்பலகைகள் கட்டிடத்தில் தெளிவாக காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

- பிரிவு 4 (எம்) - காலம் முடிவடையும் போது அல்லது வேறு காரணத்தால் உடன்படிக்கை முடிவுறுத்தப்படும் போது நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் நிதி அளிக்கப்பட்ட சொத்துக்கள் நம்பிக்கை நிதியத்தின் சொத்துக்களாக காட்டப்படும்.

திருத்தப்பட்ட நிபந்தனைகள்

-----------------------------------------------

- 2013 மார்ச் 19 திகதியிடப்பட்ட சட்ட உடன்படிக்கையின் பிரிவு 4 (ஐ) இன் படி, ஏற்றுக்கொள்ளப்பட்ட முகாமைத்துவக் கட்டணத்தை கழித்த பின் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளினுடாக உருவாக்கப்பட்ட மிகை வருமானமானமானது அடுத்த ஆண்டு ஜீன் 30 ம் திகதிக்கு முன்னர் நம்பிக்கை நிதியத்திற்க்கு செலவு வைக்கப்படும் மற்றும் நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு குழுவின் உரிய அனுமதி இல்லாமல் பிறமூதலீடுகள் செய்யப்படமாட்டாது.இருப்பினும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குனர்சபையால் பல்கலைக்கழகத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகாக ஒரு ஓதுக்க கணக்கிணைப் பேணுவதற்காக நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு குழுவின் அனுமதி கோரப்பட்டது.மற்றும் நம்பிக்கை நிதியத்துக்கு சொந்தமான கட்டிடத்தை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையிலான புதிய உடன்படிக்கை ஊடாக வாடகைக்கு விடுவதற்கு பதிலாக இந்த ஒதுக்க கணக்கில் இருந்து அத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு தேவையான நிதியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.இரு பெறுமதிகளில் பிரிவு 5 (அ).(i) இன்படி ரூபா 8 மில்லியன் வருடாந்த வாடகை வருமானம்அல்லது இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் வருடாந்த தேறிய லாபத்தில் 20 சதவீதத்தில் இருந்து கூடிய பெறுமதி செலுத்துவதற்கு ஒப்பு கொள்ளப்பட்டது.

- நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் இடையில் 19 மார்ச் 2003 ஆம் திகதியில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரிவு 4 (ஏ) இன் படி , பல்கலைக்கழகம் தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கை பற்றி சிபாரிசு செய்யும் உரிமை நம்பிக்கை குழுவிற்கு

ஒப்படைக்கப்பட்டது. மற்றும் பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்வதற்கான அனைத்தும் நடவடிக்கைகளும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் நடத்த வேண்டும். 14 நவம்பர் 2005 இல் நம்பிக்கை நிதியத்திற்கும் எஸ்எல்ஐஐரிற்கும் இடையில் இரண்டாவது உடன்படிக்கையின் பிரிவு 4 (உ) மற்றும் 4 (ஊ) இன் படி , இயக்குனர் சபையினால் எடுக்கப்படும் தீர்மானத்தின் படி எஸ்எல்ஐஐரி செயற்பாட்டு நடவக்கைகளிற்கு நடத்துவதற்கு ஒப்பு கொள்ளப்பட்டது.அதன் படி சுற்றறிக்கையை தயார் செய்தல், பரீட்சைகளை நடாத்துவதற்கு ஆயத்தம் செய்தல்,மாணவர்களை சேர்த்தல், கல்வி ஊழியர்களை சேவவையில் ஈடுபடுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை முகாமை மற்றும் பராமரிப்பு நடவடிக்கை செய்தல் ஆகியவற்றிற்கு எஸ்எல்ஐஐரி இயக்குனர் சபையின் கட்டளைப்படியும். மற்றும் முக்கிய கட்டுமானங்கள் மாத்திரம் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் கீழ் அனுமதி பெறப்பட்டது.

(ii) எஸ்எல்ஐஐரி நிர்மானிக்கப்பட்ட குத்தகைக்கு விடப்பட்ட நிலம் தொடர்பாக மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கும் வரையறுக்கப்பட்ட(உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில் நுட்ப நிறுவனத்திற்கும் இடையில் 12 மே 2015 இல் இரண்டு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.மற்றும் மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தால் வரையறுக்கப்பட்ட(உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு சார்பாக மேற்கொண்ட முதலீட்டுக்கு செலவுக்கு சமமான தொகை ரூபா 373,579,392 நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு திருப்பி செலுத்தப்பட்டது.மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து ஒரு தனிப்பட்டநிறுவனமாக வரையறுக்கப்பட்ட(உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில் நுட்ப கம்பனி நிறுவப்பட்டது. மற்றும் 2003 மார்ச் 19 இல் ஏற்படுத்தப்பட்ட ஆரம்ப ஒப்பந்தம் மற்றும் 14 நொவெம்பர் 2005 இல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட நம்பிக்கை நிதியத்திற்கு சாதகமான நிபந்தனைகள் மேலுள்ள இரண்டு ஒப்பந்தந்தின் ஊடாக நீக்கப்பட்டது.

- நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுப் பெறுமதி ரூபா 373,579,392,மஹாபொல என்ற பெயரில் வழங்கப்பட்ட புலமை பரிசிலை தொகை மற்றும் வேறு இடைநிலைச் செலவுகளை உள்ளடக்கி ரூபா 408,500,000 தொகையானது நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு கொடுக்கப்பட வேண்டும். அதன் பின்பு மஹாபொல நம்பிக்கை நிதியத்திற்கும் எஸ்எல்ஐஐரி இற்கும் இடையில் எதுவித நிதியியல் ஈடுபாடும் இல்லை. மஹாபொல நம்பிக்கை நிதியத்தில் இருந்து எஸ்எல்ஐஐரி ஒரு சுயாதீன நிறுவனமாக செயற்படும்.

- எஸ்எல்ஐஐரி ஆனது இலங்கை கணக்கீட்டு நியமம், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் அல்லது சர்வதேச கணக்கீட்டு நியமத்துக்கு உட்படவில்லை.மற்றும் 2015/2016 ஆம் ஆண்டு முதல் மஹாபொல நிதியத்திற்கு கணக்குகளை தருவதற்கு அல்லது கணக்குகளை ஒருங்கிணைப்பதற்கான தேவையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

- 15 மே 2015 இல் இருந்து 14 மே 2075 வரையிலான 60 வருட காலத்திற்கு வருடாந்த குத்தகை வாடகை 5 வருடங்களிற்கு ஒருமுறை அதிகரிக்கப்படும் அடிப்படையில் மாலாபேயில் அமைந்துள்ள எஸ்எல்ஐஐரிற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இதன் படி 14 மே 2020 இல் முடிவடையும் 5 ஆண்டுகளிற்காக ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூபா 20 மில்லியன் மற்றும் 15 மார்ச் 2070 இல் இருந்து 14 மார்ச் 2075 இன் 5 வருட காலத்திற்கு வருடாந்தம் ரூபா 40 மில்லியன் செலுத்துவதற்கும் இணங்கப்பட்டது.

- மாலபேயில் அமைந்துள்ள எஸ்எல்ஐஐரிற்கு குத்தகைக்கு விடப்பட்ட, மஹாபொல நம்பிக்கை நிதியத்திற்கு சொந்தமான நிலத்தை அல்லது அதன் பகுதியை துணைக்குத்தகைக்கு அல்லது அடமானம் வைப்பதற்கு மஹாபொல நம்பிக்கை நிதியத்திற்கு எழுத்துமூல அனுமதி தேவை இல்லை.

- எஸ்எல்ஐஐரி ஆனது அவர்களது செலவின் மூலம் பொருத்தமான நில வளாகத்தினுள் கட்டிடங்களை கட்டுவதற்கு, பொருத்தமான

வளாகத்தினுள் இயந்திரம் மற்றும் உபகரணங்களை பொருத்துதற்கு அல்லது புணரமைப்பு செய்வதற்கு ,நிலத்தை முன்னேற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

(iii) 14 நவம்பர் 2005 இல் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி, 12 மே 2015 இல் குத்தகை வாடகை ரூபா 98,642,356 நிலுவையிலிருந்த போதிலும், 12 மே 2015 இல் கம்பனியுடன் புதிய உடன்படிக்கையை கையெழுத்திட்டிருந்தது. மற்றும் 2015 இல் ஆரம்ப உடன்படிக்கையின் படி நம்பிக்கை நிதியத்தில் பெறவேண்டிய குத்தகை வாடகை ரூபா 45,358,379 ஆனது புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி ரூபா 20,000,000 வரை குறைக்கப்பட்டது.அமைச்சரவை முடிவினால் நிர்மானிக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் தொடர்பாக நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு இத்தகைய பின்தங்கிய உடன்படிக்கை ஏற்படுத்தும் போது அமைச்சரவையின் அனுமதி மேற்கொள்ள வேண்டிய போதிலும்,அதன்படி செயற்படவில்லை.

(iv) 04 மே 2017 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மான இலக்கம் சிபி/17/0956/701/011 இன் படி,அரசுக்கு சொந்தமான சொத்தான இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஆனது அரசுக்கு சொந்தமில்லாத ஒரு சுயாதீனமான நிறுவனம் என அங்கீகரிக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.இது எந்த அமைச்சின் கீழும் இல்லாமையால் அமைச்சர்களை கடமைக்கு நியமிப்பது தொடர்பாக வர்த்தமானி அறிவிப்புகளில் இருந்து அந்த நிறுவனத்தின் பெயர் நீக்கப்பட்டது.

(v) மேலும், லஞ்சம் மற்றும் ஊழலை விசாரிக்கும் ஆணையம் மற்றும் 2015 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் சட்டவிரோதம் குறித்து ஜனாதிபதி விசாரணை ஆணையத்தின் கீழ் 2 விசாரணைகள் நடத்தப்பட்டு, 2019 ஜூலை 12 ஆம் தேதி நடைபெற்ற பொது நிறுவனக் குழு கூட்டத்தில் எஸ்எல்ஐஐரி தொடர்பாக எவ்வாறு தொடரலாம் என்பது குறித்து ஒரு மாதத்திற்குள் உயர்கல்வி அமைச்சின் செயலாளரும், அறக்கட்டளை நிதியத்தின் தலைவரும் ஒரு அறிக்கையை

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர், இது 2019 ஆகஸ்ட் 2 ஆம் தேதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது, ஆனால் அதன் பரிந்துரைகளை செயல்படுத்த முடியவில்லை. | | |
| (ஈ) செப்டம்பர் 05, 2018 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மான இலக்கம் அமப / 18/1873/824/020 இன் படி, நம்பிக்கை நிதியம் நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியுடன் கையெழுத்திட்ட முதலீட்டு முகாமைத்துவ ஒப்பந்தத்தை ரத்து செய்திருந்தது. அதன்படி, நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியால் நிர்வகிக்கப்படும் போர்ட்போலியோ பிஓசியின் கார்ப்பரேட் கிளையில் உள்ள மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதியத்தின் பிரதான கணக்கிற்கு 2019 பெப்ரவரி 28 அன்று மாற்றப்பட்டது. மேலும், அந்த அமைச்சரவை முடிவின்படி, நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி கலைக்கப்பட வேண்டும் மற்றும் நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி விற்கப்பட வேண்டும் எனினும் அவை இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. | இது தொடர்பான அமைச்சர் 31.12.2019 அன்று அமைச்சரவை குறிப்பானை ஒன்றை சமர்ப்பித்தார், மேலும் அமைச்சரவையின் முடிவின்படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க பெறுகைகள் வழிகாட்டலின் 4.2 இன் பிரகாரம்,குறைந்தது மூன்று வருட காலத்தில் எதிர்பார்க்கப்படும் பெறுகைகள் நடவடிக்கைகள் பிரதான பெறுகைகள் திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டும்.எனினும்,நிதியம் பிரதான பெறுகைகள் திட்டத்தை தயாரிக்கவில்லை. | 2020 இல் இருந்து 03 ஆண்டுகளுக்கான மஹாபொல் நிதியத்தின் பெறுகைகள் நடவடிக்கைகளுக்கு திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. | அரச பெறுகைகள் வழிகாட்டலின் 4.2 இற்கு ஏற்ப செயற்பட வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)29 மே 2019 இல் நடைபெற்ற முதலீட்டு குழுவின் தீர்மானத்தின் படி, நம்பிக்கை சபையின் அனுமதியுடன் அனுபவமுள்ள நபரை முதலீட்டு முகாமைத்துவத்திற்காக நியமிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது.ஆனால் 13 ஜீலை 2020 வரை தகுதி வாய்ந்த | தகுதி வாய்ந்த நபரை நியமிக்க திறைசேரி அனுமதி வழங்கப்படவில்லை. | திறைசேரி அனுமதியுடன் அனுமதி வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| நபரை நியமிக்க திறைசேரி அனுமதி வழங்கப்படவில்லை. | | |
| (ஆ)2018 டிசம்பர் 31 வரை நிதியம் 31 ஊழியர்களுடன் அதிகாரமளிக்கப்பட்டு காணப்பட்டது.ஆனால், உண்மையில் 13 உறுப்பினர்களை கொண்டிருந்தது.18 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டது.06 உயர் மட்ட பதவிகள் 06 இடைமட்ட பதவிகள் மற்றும் 06 ஆரம்ப நிலை பதவிகள் காணப்படுகின்றன. | எதிர்காலத்தில் புதிய நியமனங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் செயற்பாடுகளை திறமையாக பராமரிக்க தேவையான ஊழியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014-2017 இற்கான ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டது .ஆனால், எதிர்காலங்களிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சமாளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | அளவு ரீதியாக மற்றும் நிதியியல் ரீதியாக மேற்பார்வை செய்வதன் மூலம் இலக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 ஜீன் 2003 திகதியிடப்பட்ட பிஇடி 12 இன் அரசாங்க வணிக சுற்றறிக்கை 5.1.3 இன் படி,விரிவான திட்டத்தின் அடிப்படையில் செயல் திட்டம் மதிப்பாண்டில் தயாரிக்கப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளிற்காக தயாரிக்கப்படும். | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.3 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி ஒழுங்கு விதிகள் 133 இன் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் சுற்றறிக்கையின் 2009 ஜீன் 09 திகதியிடப்பட்ட டிஏஎம்ஏ/2009/(1) சுற்றறிக்கையின் படி உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவப்படவில்லை.மற்றும் நிதியத்தின் நடவடிக்கைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல் குறித்து வரியக அமைச்சின் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | எதிர்காலத்தில் உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும் மற்றும் அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |

**4.4 கணக்காய்வு குழு**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மதிப்பாண்டில் கணக்காய்வு குழு கூட்டத்திற்கு அரச கணக்காய்வாளர் அழைக்கப்படவில்லை. | இது எதிர்கால கூட்டங்களில் விவாதிக்கப்படும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்திற்கு அரச கணக்காய்வாளர்கள் ஒரு பார்வையாளராக அழைக்கப்பட வேண்டும். |